# நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அம்பத்தூர்.
## முன்னிலை: திரு.P. ஜெய்சங்கர், B.A., M.L.,
## நீதித்துறை நடுவர்,
## அம்பத்தூர்.

**2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**
**குற்ற பல்வகை மனு. 803/2025**

1. திரு.V.சுப்ரமணியன்,
   த/பெ, திரு.வரதன்,
2. திரு.அசோக் குமார்
   த/பெ.திரு.V.சுப்ரமணியன்,
   எண். 9பி, 4வது குறுக்கு தெரு,
   பெரியார் சாலை, சீனிவாச நகர்,
   பாடி, சென்னை – 600 054. ....மனுதாரர்கள்/புகார்தாரர்கள்

//எதிர்//

அரசுக்காக –

1. காவல் ஆணையர்
   ஆவடி காவல் ஆணையரகம்,
   ஆவடி, சென்னை – 600 054.
2. திரு. தங்க விஜயகுமார்
   காவல் ஆய்வாளர்,
   டி–3 கொரட்டுர் காவல் நிலையம்,
   சென்னை – 600 080. ....எதிர்மனுதாரர்கள்/குற்றமுறையீட்டாளர்கள்

**எதிரி –**

3. திரு. செல்வகுமார் ......எதிர்மனுதாரர்/எதிரி

இம்மனுவானது 21.05.2025 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள்/புகார்தாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.H.சையது சலீம், திருமதி,A.K.பெனாசிர் பேகம், திரு.R.செபாஸ்டியன் ராஜ், திரு.A.முஷ்ரப், திருமதி.G.சுவாதி, திருமதி.N.செல்வஜோதி, திரு.A.கிருஷ்ணகுமார் மற்றும் திரு.N. முகமது அசாருதீன் ஆகியோர் ஆஜராகியும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## உத்தரவு.

மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் இந்நீதிமன்றம் 30.07.2024 ஆம் தேதியிட்ட Crl.M.P.No.2832/2024 வழக்கின் உத்தரவை நிறைவேற்றாத 2 வது எதிர்மனுதாரரான டி–3 கொரட்டுர் காவல் ஆய்வாளர் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்க உத்தரவிடக் கோரி சட்டப்பிரிவு 21 r/w 44 Tamil Nadu Distict Police Act 1859 இன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. மனுவின் சுருக்கம்.

(a) இம்மனுவின் மனுதாரர்/புகார்தாரரின் வீட்டின் அருகே உள்ள பொது வழிப்பாதையை ஆக்கிரமித்ததாக தகராறு ஏற்பட்டு திரு.செல்வகுமார் என்பவர் குடிபோதையில் காரை கொண்டு வந்து மனுதாரர்/புகார்தாரரின் மெயின் கேட்டில் மோதியதாகவும், மனுதாரர்/புகார்தாரர் திரு.சுப்பிரமணியம் மற்றும் அவரது மகன் திரு. அசோக் குமார் ஆகியோரை கழுத்தை பிடித்து தள்ளி, தாக்கி தங்க செயினை பறித்து நடுவிரலை முறித்து கொலை மிரட்டல் விடுத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(b) மேலும்,மனுதாரர்/புகார்தாரரின் மகன் கே.எம்.சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும், மேற்கண்ட எதிர்மனுதாரர்/எதிரி திரு. செல்வகுமார் என்பவர் மீது டி3 கொரட்டுர் காவல் நிலையத்தில் புகார் அளித்தும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாததால் மனுதாரர்/புகார்தாரர் இந்நீதிமன்றத்தில் Crl.M.P.No.2832/2024 வழக்கு தாக்கல் செய்து இந்நீதிமன்றம் எதிரி திரு.செல்வகுமார் என்பவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு 30.07.2024 அன்று உத்தரவிட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(c) மேலும், இந்நீதிமன்றம் உத்தரவிட்டு மூன்று மாதங்கள் ஆகியும், மேற்கண்ட எதிரி திரு. செல்வகுமார் என்பவர் மீது இவ்வழக்கின் 2 வது எதிர்மனுதாரர்/எதிரியான டி3 கொரட்டூர் காவல் நிலைய ஆய்வாளர் திரு. தங்க விஜயகுமார் என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை எனவும், எனவே உடனடியாக மேற்கண்ட Crl.M.P.No.2832/2024 உத்தரவு படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவிட வேண்டியும் இந்நீதிமன்ற உத்தரவை மதிக்காத 2 வது எதிர்மனுதாரர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க கோரியும் மனுதாரர்/புகார்தாரரால் சட்டப்பிரிவு 21 r/w 44 Tamil Nadu Distict Police Act 1859 இன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2.<u>எதிருரை சுருக்கம்</u> :–

(அ) இம்மனுவின் 2 வது எதிர்மனுதாரர் 12.02.2023 முதல் 13.05.2025 வரை டி3 கொரட்டூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றியதாகவும், அம்பத்தூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் Crl.M.P.No.2832/2024 பிறப்பித்த நகல் எதுவும் 2 வது எதிர்மனுதாரர் டி3 கொரட்டூர் காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது கிடைக்கபெறவில்லை எனவும் அதனால் நீதிமன்ற உத்தரவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய இயலவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது

(ஆ) மேலும், 2 வது எதிர்மனுதாரர் பணியிட மாறுதல் ஆகி சென்ற பின்பு டி3 கொரட்டூர் காவல் ஆய்வாளராக பணி புரிந்த திரு.எஸ்.விஜயகுமார் அவர்கள் நீதிமன்ற உத்தரவிற்கிணங்க காவல் உதவி ஆய்வாளர் திரு. பாலாஜி என்பவரை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய பணிக்கப்பட்டு அதன் படி டி3 கொரட்டூர் காவல் நிலைய குற்ற எண். 455/2025, சட்டப்பிரிவுகள் 294(பி). 323, 506(1) இதச வின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு வழக்கின் புலன் விசாரணை முடித்து இந்நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு அது ஆண்டு பட்டிகை வழக்கு எண். 234/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ) மேலும், 2 வது எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற ஆணைகளை மதித்து நடப்பவர் என்றும், மேலும் வருங்காலத்தில் இது போன்ற தவறுகள் நடைபெறா வண்ணம் நடந்து கொள்வதாக 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 3. <u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u>.

இவ்வழக்கு மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், இந்நீதிமன்றம் 30.07.2024 ஆம் தேதியிட்ட Crl.M.P.No.2832/2024 வழக்கின் உத்தரவை நிறைவேற்றாத 2 வது எதிர்மனுதாரரான டி–3 கொரட்டூர் காவல் ஆய்வாளர் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுப்பதற்கு போதிய முகாந்திரம் உள்ளதா? என்பதும் இவ்வழக்கு மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதுமேயாகும்.

## 4. <u>தீர்வு</u>.

(i) மனுதாரர்/புகார்தாரர் தரப்பு வழக்கு மனு, ஆவணங்கள், பரிசீலனை செய்யப்பட்டது. 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள பதில் அறிக்கை பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர்/புகார்தாரர் ஏற்கனவே நீதிமன்றத்தில் தாக்கல் செய்த Crl.M.P.No.2832/2024 வழக்கில் 30.07.2024 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவிட்டுள்ளது என்பவது இவ்வழக்கின் சங்கதிகளிலிருந்து உறுதியாகிறது.

(ii) மேலும், 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் அறிக்கையில் நீதிமன்ற உத்தரவின் படி 31.05.2025 அன்று டி–3 கொரட்டூர் காவல் நிலையத்தில் குற்ற எண். 455/2025 ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

(iii) மேலும், மேற்கண்ட வழக்கில் புலன் விசாரணை முடிக்கப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு அந்த இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தால் ஆண்டு பட்டிகை வழக்கு எண்.234/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது என்பது வழக்கு ஆவணங்களிலிருந்து உறுதியாகிறது.

(iv) மேலும், உத்தரவு நகல், காலதாமதமாக கிடைத்ததாகவும், இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் நடைபெறாது என்றும் 2 வது எதிர்மனுதாரரான காவல் ஆய்வாளர் விளக்கம் அளித்துள்ளார். இந்நீதிமன்றத்தின் உத்தரவு தற்போது முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது. மனுதாரர்/புகார்தாரர் கோரிய நிவாரணம் தற்போது கிடைத்துவிட்டதால் இந்த மனுவில் தொடர்ந்து உத்தரவு பிறப்பிக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**4. <u>முடிவாக</u>.**

இந்நீதிமன்றம் Crl.M.P.No.2832/2024 வழக்கில் பிறப்பித்த உத்தரவு நிறைவேற்றப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, இறுதி அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டு அந்த இறுதி அறிக்கை ஆண்டு பட்டிகை வழக்கு எண்ணாக கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணை நிலுவையில் இருந்து வரும் நிலையில் இந்த Crl.M.P.No.2832/2024 வழக்கில் மேற்கொண்டு எவ்வித உத்தரவும் பிறப்பிக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை என கருதி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பார்வையிட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

JAISANKAR Digitally signed by JAISANKAR